රෙජිස්ට්‍රාර් ජනරාල් දෙපාර්තමේන්තුව
பதிவாளர் நாயகம் திணைக்களம்
REGISTRAR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } எனது இலக்கம் : RG/MBD/1/சுற்றறிக்கை
ප්‍රධාන කාර්යාලය / தலைமை அலுவலகம் / HEAD OFFICE
තැ. පෙ. අංකය / த. பெ. இல. / P. O. Box No. } 565

ඔබේ අංකය / உமது இல. / Your No.
234/A3, ඩෙන්සිල් කොබ්බෑකඩුව මාවත, බත්තරමුල්ල.
234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை.
234/A3, Denzil Kobbekaduwa Mawatha, Battaramulla.
දිනය / திகதி / Date } 2025.12.11

சுற்றறிக்கை இலக்கம் : 04/2025

சகல பிரதேச செயலாளர் /மாவட்ட செயலாளர்களுக்கு

**<u>திட்வா சூறாவளியினால் ஏற்பட்ட மண்சரிவுகள் மற்றும் வெள்ளம் காரணமாகக் காணாமல் போனவர்களின் இறப்புகளைப் பதிவு செய்தல்.</u>**

தேசிய மட்டத்தில் பாரிய விளைவுகளுடன் கூடிய இயற்கை பேரனர்த்தம் அல்லது பேரழிவு காரணமாகக் காணாமல் போன நபர்களது இறப்புகளை பதிவு செய்வதற்காக 2005 ஆம் ஆண்டு 17 ஆம் இலக்க இறப்புப் பதிவு செய்தல் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம் மற்றும் 2016 ஆம் ஆண்டின் இறப்புப் பதிவு செய்தல் (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டத்திலிருந்து திருத்தப்பட்ட 2010 ஆம் ஆண்டின் 19 ஆம் ஆண்டின் இறப்புப் பதிவு செய்தல் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம் ஊடாக பதிவாளர் நாயகத்துக்கு அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள்ளது. 1951 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க பிறப்பு மற்றும் இறப்புப் பதிவு செய்தல் சட்டத்தின் பிறப்புகள் மற்றும் இறப்புகளைப் பதிவு செய்வதற்குக் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய திட்வா சூறாவளியினால் காணாமல் போனவர்களது இறப்புகளைப் பதிவு செய்வதற்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்காக இச்சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது.

02. 2010 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இறப்புப் பதிவு செய்தல் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆவது பிரிவுக்கமைய, என்னால் 2465/08 ஆம் இலக்க 2025.12.02 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானிப் பத்திரம் ஊடாகப் பேரனர்த்தங்களுக்கு உள்ளான பிரதேசங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய நிருவாக மாவட்டங்களை தவிர்ந்து ஏனைய நிருவாக மாவட்டங்களில் அனர்த்தங்கள் காரணமாக ஏற்பட்ட காணாமல் போனோரின் இறப்புகளைப் பதிவு செய்தற்கான ஏற்பாடுகள் இதனூடாக வழங்கப்பட்டுள்ளன.

03. அதற்கமைய திட்வா சூறாவளியின் பாதிப்பினால் ஏற்பட்ட மண்சரிவு மற்றும் வெள்ளம் காரணமாகக் காணாமல் போன நபர்களது இறப்புகளைப் பதிவு செய்தல் தொடர்பாக விண்ணப்பங்களை பொறுப்பேற்றல் தொடக்கம் இறப்புகளைப் பதிவு செய்தல் வரையான செயன்முறை பின்வருமாறு.

## I. விண்ணப்பங்களைப் பொறுப்பேற்றல்

<u>விண்ணப்பங்களை யாரால் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்</u>

மேலே குறிப்பிடப்பட்ட தேசிய பேரனர்த்தத்தின் போது காணாமல் போன நபர் அல்லது நபர்களது கிட்டிய உறவினர் அல்லது குறித்த நபரது அல்லது நபர்களது குடும்பத்தின் எவரேனும் உறுப்பினர் ஒருவர் குறித்த பேரனர்த்தத்தினால் உயிர் பிழைக்காத சந்தர்ப்பத்தில் அவ்வாறு காணாமல் போன நபர் தொடர்பாக அறிந்த நபரொருவர் அல்லது அவ்வாறு காணாமல் போனதாக உறுதியாக நம்புகின்ற நபரொருவரினால் விண்ணப்பப் படிவமொன்றைச் சமர்ப்பிக்க முடியும்.



දුරකථන අංකය / தொலைபேசி இல. / Telephone No. } 2889488 2889489
ෆැක්ස් අංකය / தொலைநகல் / Fax No. } 2889491
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website } www.rgd.gov.lk
විද්‍යුත් තැපෑල / மின்னஞ்சல் / E-mail } rgd@sltnet.lk rg@rgd.gov.lk

விண்ணப்பிக்க வேண்டிய முறை

மேலே குறிப்பிட்ட நபர் ஒருவரினால் இறந்துவிட்டதாக நம்பப்படும் நபர் வழமையாக வசித்து வந்த பிரதேசத்தின் கிராம உத்தியோகத்தரிடம் (கேகாலை மாவட்டத்தில் கேகாலை கிராம உத்தியோகத்தர் பிரிவில் வழமையாக வசித்து வந்த நபரொருவர், கண்டி மாவட்டத்தில் மினிப்பே பிரதேச செயலகத்தின் யஹன்கலை மலை மண்சரிவினால் ஏற்பட்ட பாதிப்புக்குள்ளான பிரதேசத்தில் பேரனர்த்தத்துக்கு முகம் கொடுத்து காணாமல் போயிருப்பினும் குறித்த கோரிக்கையானது குறித்த நபர் வழமையாக வசித்த கேகாலை மாவட்டத்தின் கேகாலை கிராம உத்தியோகத்தர் பிரிவின் கிராம உத்தியோகத்தரிடமே சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.) இணைப்பு 01 இற்கமையவான விண்ணப்பப் படிவமொன்றினைக் காணாமல் போன நபரது சகல விபரங்களையும் உள்ளடக்கி சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அத்தகைய ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்துடனும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை உறுதிப்படுத்தும் சத்திய பிரகடனம் ஒன்றினையும் சமர்ப்பித்தல் வேண்டும். (இணைப்பு 02)

II. விண்ணப்பபடிவத்திற்கமைய நடவடிக்கை எடுத்தல்.

விண்ணப்பப்படிவம் கிராம உத்தியோகத்தருக்கு கிடைக்கப் பெற்றதும் அவருக்கு தேவை என கருதும் பரிசோதனையொன்றின் பின்னர் குறித்த கோரிக்கைக்கு பரிந்துரை செய்து கூடிய விரைவில் அதில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் தொடர்பாக அவரது அறிவுக்கெட்டிய வகையில் உண்மைத் தன்மையினை உறுதிப்படுத்தும் அறிக்கையொன்றுடன் இணைப்பு 01 இன் பின்புறத்திற்கமைய குறித்த கிராம உத்தியோகத்தர் பிரிவு உள்ளடங்கும் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் / மாவட்டப் பதிவாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் குறித்து பிரதேச செயலாளர் / மாவட்டப் பதிவாளர் திருப்தியடையா விட்டால் அதனை நிராகரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டுமென்பதோடு, அவ்விடயம் குறித்து விண்ணப்பதாரிக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும். (இணைப்பு 03)

III. அறிவித்தலை காட்சிப்படுத்தலும் மாவட்டப் பதிவாளருக்கு அறிவித்தலும்

பிரதேச செயலாளர் / மாவட்டப் பதிவாளரிடம் விண்ணப்பப்படிவம், கிராம உத்தியோகத்தர் அறிக்கை மற்றும் சத்திய பிரகடனம் கிடைக்கப்பெற்றதன் பின்னர் இணைப்பு 04 இற்கமைவாக 02 பிரதிகளில் தயாரித்து அதன் ஒரு பிரதியினை தனது அலுவலகத்தின் அறிவித்தல் பலகையில் 02 வாரங்கள் காட்சிப்படுத்துதல் வேண்டும். மற்றைய பிரதியினை இணைப்பு 5 இற்கமைய தயாரிக்கப்பட்ட முகப்புக் கடிதத்துடன் இரு (02) வார காலம் கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில் காட்சிப்படுத்துவதற்காக உரிய கிராம உத்தியோகத்தருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். 02 வார காட்சிப்படுத்தல் காலம் முடிவடைந்தவுடன் கிராம உத்தியோகத்தர் தான் அறிவித்தலை காட்சிப்படுத்தியதாக இணைப்பு 05 இல் கீழே உள்ள பகுதிக்கமையப் பிரதேச செயலாளர் / மாவட்டப் பதிவாளருக்கு அறிக்கையிடல் வேண்டும்.

04. வெளிநாட்டவர்களது இறப்புகளைப் பதிவு செய்தல்.

வெளிநாட்டவர் ஒருவர் இலங்கைக்கு வருகை தந்திருக்கும் சந்தர்ப்பத்தில் மேற் குறிப்பிட்ட இயற்கை பேரனர்த்தத்தினால் காணாமல் போய் இருப்பதாகச் சாட்சிகள் காணப்படும் போது இந்நபருக்கான இறப்புச் சான்றிதழொன்றினைத் தன்னிடமிருந்து விநியோகித்துக் கொள்வதற்காக குறித்த விடயம் பற்றி அறிந்துள்ள எவரேனும் கோரிக்கையைச் சமர்ப்பிக்க முடியும். அவ்வொவ்வொறு விண்ணப்பப் படிவத்திலும் இறந்து போனதாக நம்புகின்ற நபர் பிரஜையாக இருந்த நாட்டிற்காக இலங்கையில் இருக்கின்ற தூதுதர் அல்லது கொன்சூலர் உறுதிப்படுத்தி, விண்ணப்பப்படிவத்தை நேரடியாக பதிவாளர் நாயகத்துக்கு அனுப்பி வைத்தல் வேண்டுமென்பதோடு, அவரால் குறித்த இறப்பினைப் பதிவு செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

05. "காணவில்லை என்பதற்கான சான்றிதழொன்று" விண்ணப்பித்தல் - இந்த இயற்கை பேரனர்த்த நிலமையின் கீழ் ஏதேனும் நபரொருவரால் காணவில்லை என்பதற்கான சான்றிதழொன்றினைக் கோரி விண்ணப்பித்தால், அவ்விடயம் குறித்து பதிவாளர் நாயகத்தின் 11/2016 ஆம் இலக்க 2016.11.21 ஆம் திகதிய சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கமைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

06. இச் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்கள் தொடர்பாக அதிவிஷேட முக்கியத்துவத்தை வழங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறியத்தருகின்றேன். இதற்காக தேவைப்படும் அச்சிடப்பட்ட மாதிரிப்படிவங்களை இதனுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி படிவங்களுக்கமைய தயாரித்துக்கொள்ளல் வேண்டும்.

07. இந்த சுற்றறிக்கையிலுள்ள அறிவுறுத்தல்கள் தொடர்பாக உங்களது பிரிவில் கடமையாற்றுகின்ற சகல கிராம உத்தியோகத்தர்கள், பிறப்பு மற்றும் இறப்புப் பதிவாளர்களுக்குத் தெளிவூட்டுமாறும், இவ் இயற்கை பேரனர்த்தத்தினால் காணாமல் போனவர்களது உறவினர்கள் நண்பர்களுக்கு காணாமல் போனவர்கள் தொடர்பான இறப்புச் சான்றிதழொன்றினை பெற்றுக் கொள்ளும் முறை குறித்து சரியான தெளிவுபடுத்தல் ஒன்றினை வழங்கி, அவர்களுக்கு ஒத்துழைப்பினை வழங்குமாறும், உங்களது மேற்பார்வையின் கீழ் கடமைகள் மேற்கொள்கின்ற சகல உத்தியோகத்தர்களுக்கும் தெளிவுபடுத்துமாறும் தயவுடன் அறியத்தருகின்றேன்.

எஸ்.ஜலதீபன்,
பதிவாளர் நாயகம்.

பிரதிகள் :

| | | |
|---|---|---|
| 01. | செயலாளர், பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு | - தகவலுக்காக |
| 02. | ஆணையாளர் நாயகம், அத்தியாவசிய சேவைகள் திணைக்களம் | - உரிய நடிவடிக்கைகளுக்காக |
| 03. | சகல மாவட்ட செயலாளர்கள் / மேலதிக பதிவாளர் நாயகங்கள் | - தகவலுக்காக |
| 04. | வலய பொறுப்பு சகல பிரதி/ உதவி பதிவாளர் நாயகங்கள் | - தகவலுக்காக |
| 05. | சகல காணிப் பதிவாளர்கள் மற்றும் மேலதிக மாவட்டப் பதிவாளர்கள் | - உரிய நடிவடிக்கைகளுக்காக |

IV. ஆட்சேபனைகளைச் சமர்ப்பித்தலும் பதிவாளர் நாயகத்துக்கு அனுப்பி வைத்தலும்.

அறிவித்தல் முதற்தடவையாகக் காட்சிப்படுத்தப்பட்ட நாளில் இருந்து ஒரு மாத காலப் பகுதிக்குள் சத்திய பிரகடனமொன்றுடன் கிடைக்கப்பெறுகின்ற எழுத்து மூலமான ஆட்சேபனைகளை மாத்திரம் வலய பொறுப்பு பிரதி /உதவி பதிவாளர் நாயகங்கள் அல்லது மாவட்டப் பதிவாளர்களால் பொறுப்பேற்கப்படல் வேண்டும். அவ்வாறு பொறுப்பேற்ற ஆட்சேபனைகள் தொடர்பான விபரங்களை விண்ணப்பங்கள் பொறுப்பேற்றல் பதிவேட்டில் குறித்துக் கொண்டு குறித்த ஆட்சேபனையை விண்ணப்பப்படிவத்துடன் கோவைப்படுத்துதல் வேண்டும். ஆட்சேபனையானது மாவட்டப் பதிவாளரிடம் மேற்கொள்ளப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் பொருத்தமான பரிசோதனை ஒன்றின் பின்னர் தனது கையொப்பத்துடன் கூடிய அறிக்கையொன்றுடன் வலய பொறுப்பு பிரதி / உதவி பதிவாளர் நாயகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

V. பிரதேச செயலாளர் / மாவட்டப் பதிவாளரது பரிந்துரை

ஆட்சேபனைகளைச் சமர்ப்பிக்க வேண்டிய கால வரையரை முடிவடைந்தவுடனேயே பிரதேச செயலாளர் / மாவட்டப் பதிவாளரினால் குறித்த விண்ணப்பப்படிவத்தை இணைப்பு 06 இற்கமைய பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வலய பொறுப்பு பிரதி / உதவி பதிவாளர் நாயகத்துக்கு தாமதிக்காமல் சமர்ப்பித்தல் வேண்டும்.

VI. கட்டளையை வழங்குதல்.

வலய பொறுப்பு பிரதி / உதவி பதிவாளர் நாயகத்தினால் மேற் குறிப்பிட்ட ஆவணங்கள் தொடர்பாகத் திருப்தியடைந்தன் பின்னர், குறித்த இறப்பினைப் பதிவு செய்வதற்காகக் கட்டளையினை பிறப்பித்து காணாமல் போனதாக நம்புகின்ற நபர் காணாமல் போய் விட்டதாக அறியவரும் பிரதேசம் உள்ளடங்கும் பிரிவின் பிறப்பு மற்றும் இறப்புப் பதிவாளரருக்கு இணைப்பு 01 இன் பின்புறம் மற்றும் இணைப்பு 7 மாதிரிக்கமையவான கட்டளையொன்றினை அனுப்புதல் வேண்டும். பிரிவுப் பதிவாளரால் குறித்த இறப்பு முறையாக பதிவு செய்யப்பட்டதன் பின்னர் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரியின் பெயருக்கு இறப்புச் சான்றிதழின் இலவசமாக வழங்கப்படும் பிரதியினை கிடைக்கப்பெறச் செய்தல் வேண்டும்.

VII. மேன்முறையீடுகளைச் சமர்ப்பித்தல்.

பிரதேச செயலாளர் / மாவட்டப் பதிவாளரால் விண்ணப்பப்படிவத்தை நிராகரிப்பதற்கு எடுத்த தீர்மானத்தினால் அதிருப்தி அடைந்த ஒரு விண்ணப்பதாரிக்கு அல்லது ஆட்சேபனைகளை முன்வைத்துள்ள சந்திர்ப்பத்திலும் இறப்புச் சான்றிதழொன்றினை வழங்குவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் குறித்து அதிருப்தி அடைந்த நபரொருவருவருக்குச் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் குறித்த நிராகரிப்பினை அல்லது சான்றிதழினை வழங்குவதற்கு எதிராக மேன்முறையீடொன்றினை சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் குறித்த நிராகரிப்பு அல்லது சான்றிதழை வழங்குதல் பற்றியதான அறிவித்தல் திகதியில் இருந்து ஒரு மாத காலப்பகுதிக்குள் பதிவாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்க முடியும். அவ்வாறு கிடைக்கப்பெறும் மேன்முறையீடுகள் அதற்குரிய விண்ணப்பப்படிவம், பரிசோதனை குறிப்புகள் மற்றும் அதனோடிணைந்த ஆவணங்களுடன் கோவைப்படுத்தப்பட்டு வலய பொறுப்பு பிரதி /உதவி பதிவாளர் நாயகத்திற்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

கிராம உத்தியோகத்தரது சான்று (அலுவலக பயன்பாட்டிற்காக)

மாவட்டப் பதிவாளர் / பிரதேச செயலாளர், ..............................................................

இதன் மறுபுறத்தில் உள்ள விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் எனது அறிவுக்கெட்டிய வரையில் உண்மையானது என உறுதிப்படுத்துகின்றேன். ஆகையினால் குறித்த மரணத்தை (110 ஆவது அதிகாரமாகிய) பிறப்பு மற்றும் இறப்புப் பதிவு செய்தல் சட்டத்தின் கீழ் இதன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை உள்ளடக்கி பதிவு செய்தல் பொருத்தமானதென நான் பரிந்துரைக்கின்றேன்.

01. பதிவு செய்யப்பட வேண்டிய மாவட்டம் : ..............................................................
02. பதிவு செய்யப்பட வேண்டிய பிறப்பு இறப்புப் பிரிவு : ..............................................................இறப்பு நிகழ்ந்த திகதி (அண்ணளவாக) ..............................................................
03. இறப்பு நிகழ்ந்த இடம் : ..............................................................
04. இறந்த நபரது முழுப் பெயர் : ..............................................................
05. ஆண் /பெண் மற்றும் இனம் : ..............................................................
06. வயது : ..............................................................
07. நிலை அல்லது தொழில் : ..............................................................
08. பெற்றோர்களது முழுப்பெயர் : ..............................................................
தந்தை : ..............................................................
தாய் : ..............................................................
09. இறப்பிற்கான காரணமும் அடக்கம் செய்த அல்லது தகனம் செய்த இடமும் : ..............................................................
10. அறியத்தருபவரின் முழுப்பெயர், வசிப்பிடம் மற்றும் இறந்த நபருக்குடனான உறவு முறை : ..............................................................

கிராம உத்தியோகத்தரது கையொப்பம் : ..............................................................

கிராம உத்தியோகத்தர் - பிரிவு மற்றும் பதவி முத்திரை : ........................ திகதி : ........................

---

<u>மாவட்டப் பதிவாளர் /பிரதேச செயலாளரது கையொப்பம்</u>

பிரதி பதிவாளர் நாயகம்

.................................. வலயம்.

பரிந்துரைத்து /பரிந்துரைக்காது சமர்ப்பிக்கின்றேன்.

..............................................................
மாவட்டப் பதிவாளர் / பிரதேச செயலாளர் திகதி ........................

---

<u>வலய பொறுப்பு பிரதி பதிவாளர் நாயகத்தின் கட்டளை</u>

பிறப்பு, இறப்பு பதிவாளர்,

.................................. பிரிவு.

மேற்குறித்த இறப்பினைப் பதிவு செய்வதற்கு .................................. மாவட்டத்தின் ........................ பிரிவின் இறப்புப் பதிவாளருக்கு இத்தால் கட்டளை இடுகின்றேன்.

..............................................................
பிரதி பதிவாளர் நாயகம் திகதி ..................................

---

01. இறப்பு நிகழ்ந்த இடத்தை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாவிடின் - உரிய நபர் "கடைசியாக .................................. வசித்தார்" என குறிப்பிடவும்.
02. இனம் - இங்கு குறிப்பிடப்பட வேண்டியது இன வகையாகும். அதாவது சிங்களம், இலங்கை தமிழர், இந்தியத் தமிழர், இலங்கை இஸ்லாத்தவர் என்ற வகையிலாகும்.
03. இறப்பிற்கான காரணம் மற்றும் அடக்கம் அல்லது தகனம் செய்யப்பட்ட இடம் - "திட்வா சூறாவளி பேரனர்த்தம் காரணமாக காணமல் போய் இருப்பதனால் இறந்து விட்டதாக உறுதியாக நம்புகின்றேன்." என்று குறிப்பிடவும். அடக்கம் அல்லது தகனம் செய்த இடம் - "தெரியாது" என்று குறிப்பிடவும்.

இணைப்பு 01

<u>2010 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இறப்புப் பதிவு செய்தல் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம்</u>

<u>காணாமல் போன நபரொருவரது இறப்பினைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவம்.</u>

........................................ பிரிவின் கிராம உத்தியோகத்தருக்கு,

| | | |
|---|---|---|
| 01. | காணாமல் போன நபரது முழுப்பெயர் | : .................................................. |
| 02. | ஆண் /பெண் மற்றும் இனம் | : .................................................. |
| 03. | வயது | : .................................................. |
| 04. | இறப்பு இடம்பெற்ற திகதி (அண்ணளவாக) | : .................................................. |
| 05. | கடைசியாக வசித்த இடமென அறிந்த இடத்தின் முகவரி | : .................................................. |
| 06. | நிரந்தர வசிப்பிடம் | : .................................................. |
| 07. | விண்ணப்பதாரியின் முழுப்பெயரும் வசிப்பிடமும் | : .................................................. |
| 08. | பதவி அல்லது தொழில் | : .................................................. |
| 09. | காணாமல் போனவருக்கு விண்ணப்பதாரியுடனான உறவு முறை | : .................................................. |
| 10. | விண்ணப்பதாரியின் தொலைபேசி இலக்கம் | : .................................................. |

மேற்குறித்த .............................................................................. (காணாமல் போனவரின் பெயர்) என்பவர் 2025 நவம்பர் மாதம் இடம்பெற்ற திட்வா சூறாவளியின் பாதிப்பினாலான இயற்னை பேரனர்த்தத்தின் காரணமாகக் காணாமல் போயுள்ளார் எனவும், குறித்த ..................................................... .................................................. (காணாமல் போனவரின் பெயர்) என்பவர் இறந்து விட்டதாக நான் உறுதியாக நம்புவதாகவும், ........................................................................ (விண்ணப்பதாரரின் முகவரி) விலாசத்தில் வசிக்கின்ற ................................................................ (விண்ணப்பதாரியின் பெயர்) என்ற நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

ஆகையால் (110 ஆவது அதிகாரமாகிய) பிறப்பு மற்றும் இறப்புப் பதிவு செய்தல் சட்டத்தின் கீழ் குறித்த இறப்பினைப் பதிவு செய்யுமாறும் குறித்த இறப்பு தொடர்பான இறப்புச் சான்றிதழொன்றினை எனக்கு வழங்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம் : ........................ திகதி : ........................

இணைப்பு 02

## சத்தியக் கடதாசி

………………………………… மாவட்டத்தின் ………………………………………………
(வெளிப்படுத்துபவரின் விலாசம்)

வசிக்கின்ற ……………………………………………………………………… ஆகிய நான் ……….
(வெளிப்படுத்துபவரின் முழுப் பெயர்) (சமயம்)

ஆக இங்கு கீழே குறிப்பிட்டுள்ள விடயங்கள் உண்மையானது என்று நேர்மையாகவும், விசுவாசமாகவும் இத்தால் சத்தியம் செய்து வெளிப்படுத்துகின்றேன். / உறுதி மொழியளிக்கின்றேன்.

1. இங்கு வெளிப்படுத்துபவர் நான் ஆவேன்.

2. …………………………… விலாசத்தில் வசித்து ………………………………………..
(காணாமல் போனவரின் வசிப்பிடம்) (காணாமல் போனவரது முழுப் பெயர்)
……………………………………….. என்ற நபர் எனது ……………………………………. ஆவார் என்றும், (காணாமல் போனவருக்கு வெளிப்படுத்துனருடன் உள்ள தொடர்பு)

3. அவர்/ அவள் ………………………… ஆம் திகதிக்கு பின்னர் காணக்கிடைக்காததுடன் அவர் /அவள் உயிருடன் இருப்பதற்கான எவ்வித தகவலும் இல்லை என்றும்,

4. அவர்/ அவள் ……………………………………………………………………………………
…………………………………… காரணத்தினால் காணாமல் போய் இருப்பதாக நான்
(காணாமல் போனதற்கு காரணம்) நம்புகின்றேன் என்றும்,

5. என்னால் இத்துடன் சமர்ப்பிக்கப்படுகின்ற ……………………… ஆம் திகதியையுடைய விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் உண்மையானதும், சரியானதும் எனவும் 2010 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இறப்புப் பதிவுச் செய்தல் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் 15 (அ) பிரிவின் கீழ் தெரிந்தே பொய்யான வெளிப்படுத்தல் ஒன்றினை மேற்கொள்ளல் அல்லது பொய்யான தகலொன்றினை வழங்குதல் காரணமாக நான் இச்சட்டத்தின் கீழான குற்றம் ஒன்றுக்குக் குற்றவாளியாகுவேன் என நன்கு அறிவேன் என்றும், உயர் நீதிமன்றத்தினால் நடாத்தப்படுகின்ற வழக்கு விசாரணையொன்றின் பின்னர் குற்றவாளியாக்கப்படுமிடத்து 5 வருடங்களுக்கு குறைவான காலத்திற்கு சிறைத் தண்டனை வழங்கப்படும் என்பதை அறிவேன் என வெளிப்படுத்துகின்றேன்.

(50/- பெறுமதியான முத்திரை)

பிரகடனப்படுத்துபவரின் கையொப்பம்

| |
|---|
| மேற்போந்த பெயர் குறிப்பிடப்பட்ட பிரகடனப்படுத்துபவருக்கு மேற்போந்த சத்திக் கடதாசியின் பொருளடக்கம் வாசிக்கப்பட்டு விளங்கப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவர் 20 ………. ஆம் ஆண்டு …………….. மாதம் ……………… ஆம் திகதியன்று என் முன்னிலையில் சத்தியம் செய்து வெளிப்படுத்துகின்றேன் / உறுதியளிக்கின்றேன். |

என் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டது

சத்திய பிரமாண ஆணையாளர் / சமாதான நீதவான்
(சமாதான நீதவானின் பதவி முத்திரை)

❖ தேவையற்ற சொற்களை வெட்டி விடவும்.

இணைப்பு 03

எனது இலக்கம் :

பிரதேச செயலகம்

.......................................

20 ..................................

திரு /திருமதி ............................

.............................................

.............................................

**<u>2010 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க பதிவு செய்தல் (தற்காலிக ஏற்பாடுகள் சட்டம்) கீழ் காணாமல் போன நபர் ஒருவரது இறப்பினைப் பதிவு செய்தலுக்கான விண்ணப்பப்படிவம் தொடர்பானது.</u>**

மேற்குறித்த விடயம் தொடர்பாகத் தங்களால் ................................ (கி.உ. பிரிவு) கிராம உத்தியோகத்தருக்கு அனுப்பி வைக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் தொடர்பானது.

குறித்த விண்ணப்பப்படிவம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களுக்காக நிராகரிக்கப்படுகிறதென இத்தால் அறியத்தருகின்றேன்.

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

இந்த தீர்மானம் தொடர்பாக மேன்முறையீடு செய்வீர்களாயின் இக்கடிதம் ஒப்பமிடப்பட்ட திகதியில் இருந்து ஒரு மாத காலப்பகுதிக்குள் அதற்குரிய மேன் முறையீட்டினை எனக்கு தாமதிக்காமல் அனுப்பி வைக்கவும்.

இப்படிக்கு,

சேவைக்கு அர்ப்பணிப்புள்ள,

.....................................

பிரதேச செயலாளர் /மாவட்டப் பதிவாளர்

இணைப்பு 04

## அறிவித்தல்

<u>2010 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இறப்புப் பதிவு செய்தல் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம்</u>

மேற்குறித்த சட்டத்தின் கீழ் காணாமல் போன நபரொருவரது இறப்பினைப் பதிவு செய்வதற்காக எனக்கு கிடைக்கப்பெற்ற விண்ணப்பப் படிவமொன்றின் பிரதியொன்றினை இத்துடன் அனுப்புகின்றேன்.

02. இந்த இறப்பினை பதிவு செய்தல் குறித்து ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் குறித்த ஆட்சேபனையை இந்த அறிவித்தல் திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் எனக்கு எழுத்து மூலமாகச் சமர்ப்பிக்குமாறு இத்தால் அறிவிக்கின்றேன்.

03. ஆட்சேபனையை சமர்ப்பிக்கும் போது அவ்வாறு ஆட்சேபனையை தெரிவிப்பதற்கான காரணங்களை தெளிவாக குறிப்பிட்டு, ஆட்சேபனையை சமர்ப்பிப்பவரால் மற்றும் அத்தகைய <u>வேறொரு</u> நபரினால் சமர்ப்பிக்கப்படுகின்ற சத்தியக் கடதாசி ஒன்றினால் குறித்த ஆட்சேபனைகள் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

.................................

மாவட்டப் பதிவாளர்

திகதி : ..........................

........................................... பிரதேச செயலகத்தில் வைத்து.

அறிவித்தல் காட்சிப்படுத்தப்பட்ட திகதி : .....................

| |
|---|
| காணாமல் போன நபர் ஒருவரது இறபப்பினை பதிவு செய்வதற்காக என்னால் அனுப்பி வைக்கப்படுகின்ற விண்ணப்பப் படிவத்தின் பிரதியினை இங்கு ஒட்டவும். |

இணைப்பு 05

எனது இலக்கம் :
பிரதேச செயலகம்,

…………………………………………….

…………………………………………

20 ……………………….. ஆம் திகதி

கிராம உத்தியோகத்தர்,
…………………………..

<u>காணாமல் போன நபர் ஒருவரது இறப்பு ஒன்றினை பதிவு செய்தல்</u>

2010 ஆம் ஆண்டின் 19 ஆம் இறப்புப் பதிவு செய்தல் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரகாரம் ………………………………………….. என்பவரது இறப்பினைப் பதிவு செய்வதற்காக ………………………………… என்ற விலாசத்தில் வசிக்கின்ற ……………………………………… என்பவரால் என்னிடம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் பிரதியொன்றினை இத்துடன் அனுப்புகின்றேன்.

02. தயவு செய்து இதனை உங்களது அறிவித்தல் பலகையில் இரண்டு வாரங்கள் காட்சிப்படுத்தவும். அதன் பின்னர் அவ்விடயம் குறித்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாதிரியினூடாக எனக்கு அறிக்கை செய்யவும்.

பிரதேச செயலாளர் /மாவட்டப் பதிவாளர்

---

உமது இலக்கம் ……………..

20 ……………… ஆம் திகதி

பிரதேச செயலாளர் /மாவட்டப் பதிவாளர்

…………………………………………

<u>காணாமல் போன நபர் ஒருவரது இறப்பு ஒன்றினை பதிவு செய்தல்</u>

மேற்குறித்த கடிதத்துடன் அனுப்பப்பட்ட 2010 ஆம் ஆண்டின் 19 ஆம் இறப்புப் பதிவு செய்தல் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரகாரம் ……………………………………………… என்பவரது இறப்பினைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவம் 20 ………… ஆம் திகதி 20 ……… ஆம் திகதி வரை இரண்டு வாரங்கள் எனது அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டதாக இத்தால் அறிக்கை செய்கின்றேன்.

…………………………..
கிராம உத்தியோகத்தர்
திகதி :

பதவி முத்திரை

இணைப்பு 06

எனது இலக்கம் .......................

பிரதேச செயலகம் ,

...............................................

20 .................................... ஆம் திகதி

பிரதி /உதவி பதிவாளர் நாயகம்

……………………………….. வலயம்.

<u>திட்வா சூறாவளியின் பாதிப்பினால் ஏற்பட்ட இயற்கை பேரனர்த்தத்தினால் காணாமல் போனோரின் இறப்புகளைப் பதிவு செய்தல்.</u>

2010 ஆம் ஆண்டின் 19 ஆம் இறப்புப் பதிவு செய்தல் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரகாரம் ……………………………………………… என்பவரது இறப்பினைப் பதிவு செய்வதற்காக …………………………………… என்ற விலாசத்தில் வசிக்கின்ற திரு/திருமதி ………………………………………… என்பவரால் கிராம உத்தியோகத்தரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தைச் சிபாரிசு செய்து பின்வரும் ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்படுகிறதெனத் தயவுடன் அறியத்தருகின்றேன்.

I. விண்ணப்பப்படிவம்
II. சத்திய கடதாசி
III. கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ்
IV. வேறு இணைப்புகள் இருப்பின்

02. இந்த இறப்பினைப் பதிவு செய்ய வேண்டிய, காணாமல் போன இடத்திற்குரிய பதிவாளரது விபரங்கள் பின்வருமாறு.

- பதிவாளரது பெயர் ..................................................
- பிறப்பு இறப்புப் பிரிவு ..................................................
- தொலைபேசி இலக்கம் .................................................

.......................................
பிரதேச செயலாளர் /மாவட்டப் பதிவாளர்

பிரதி : விண்ணப்பத்தாரிக்கு - தகவலுக்காக

இணைப்பு 07

எனது இலக்கம்........................................

வலய அலுவலகம்,

............................................................,

20...................................................

திரு /திருமதி .............................................................

.............................................................................

...........................................................................

விவாக, பிறப்பு மற்றும் இறப்புப் பதிவாளர்

பிரிவு .......................................................................,

<u>திட்வா சூறாவளியின் பாதிப்பினால் ஏற்பட்ட இயற்கை பேரனர்த்தத்தினால் காணாமல் போனோரின் இறப்புகளைப் பதிவு செய்தல்.</u>

2010 ஆம் ஆண்டின் 19 ஆம் இறப்புப் பதிவு செய்தல் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரகாரம் ............................................. என்பவரது இறப்பினைப் பதிவு செய்வதற்காக ...................................... என்ற விலாசத்தில் வசிக்கின்ற திரு/திருமதி ............................................ என்பவரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இறப்பினைப் பதிவு செய்வதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

02. குறித்த இறப்பினை முறையாகப் பதிவு செய்ததன் பின்னர் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பத்தாரிக்கு இலவசமாக விநியோகிக்க வேண்டிய இறப்பு சான்றிதழினை வழங்குதல் வேண்டும்.

03. குறித்த இறப்புச் சான்றிதழின் இரண்டாம் பிரதியினை ஒப்படைக்கும் போது இந்த விண்ணப்பப் படிவம் மற்றும் சத்தியக் கடதாசி என்பவற்றை இரண்டாம் பிரதியுடன் இணைத்து ஒப்படைத்தல் வேண்டும்.

04. இறப்புச் சான்றிதழில் தகவல் வழங்குபவரின் கையொப்பம் என்ற இடத்தில் "2010 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இறப்புப் பதிவு செய்தல் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரகாரம் பதிவு செய்யப்பட்டது" என்று குறிப்பிடப்படல் வேண்டும்.

...................................................

பிரதி பதிவாளர் நாயகம்,

.....................................வலயம் .

பிரதி :

01. பிரதேச செயலாளர் - தயவுடன் தகவலுக்காக

02. விண்ணப்பத்தாரி - தயவுடன் தகவலுக்காக